# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 2002 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

(2002, டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, டிசெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.75 தபாற் செலவு : ரூபா 4.50

## 2002 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஒ. 23/2002
4693

## 1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்கு பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:— 1999 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.

"முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பாகத்தை நீடித்தல். 3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2003 திசம்பர் 31 ஆம் திகதிவரை நடைமுறையிலிருத்தல் வேண்டும்.".

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2001 மாச்சு 10 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

4. (1) பதிவாளர் ஒருவரால், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதும் 2001 மாச்சு 10 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று முடிவடைவதுமான காலப்பகுதியின்போது அவ்வாறு பதிவுசெய்யப்பட்டதுமான செல்லுபடியாக்குதல்.

தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஏதேனும் கூட்டாட்சி ஆதனம் தொடர்பான கூட்டாட்சி வரைபடம் மேற்கூறப்பட்ட பிரிவின் தேவைப்பாடுகளுக்கிணங்கச் செல்லுபடியான விதத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தேசிய வீடமைப்பு ஆணையாளரின் அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளரின் கைப்பட 2001 மாச்சு 10 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று முடிவடையும் காலப்பகுதியின்போது வழங்கப்பட்டதான முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்டவாறான சான்றிதழொன்று மேற்கூறப்பட்ட பிரிவின் தேவைப்பாடுகளுக் கிணங்கச் செல்லுபடியாகும் விதத்தில் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம். இல.32. திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம். லோட்டஸ்ரோட். கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.